செய்தி வெளியீடு எண்: 55 நாள்:13.05.2021

# செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில், ஊரடங்கு தொடர்ந்து அமலில் இருந்து வந்தாலும், நோய்த் தடுப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டு வரும் நிலையில், தற்போது மாநிலத்தில் நோய்த் தொற்று பரவல் தொடர்ந்து அதிகரித்து வருவதை முன்னிட்டு, கொரோனா நோய்த் தொற்றுப் பரவலைக் கட்டுபடுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதிக்க இன்று (13.05.2021) மாலை 5–00 மணியளவில், தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10–வது தளத்தில் உள்ள கூட்ட அரங்கில், ‘‘அனைத்து சட்டமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டம்’’ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர். அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் என்ற முறையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. டி.ஆர். பாலு, திரு. ஆர்.எஸ். பாரதி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. டி. ஜெயக்குமார், டாக்டர் வெ. பரமசிவம், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் திருமதி விஜயதரணி , திரு. முனிரத்தினம், பாரதிய ஜனதா கட்சி சார்பில் திரு. நயினார் நாகேந்திரன், திரு. எம்.என். ராஜா, பாட்டாளி மக்கள் கட்சியின்

சார்பில் திரு. ஜி.கே. மணி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் திரு. எம். பூமிநாதன், திரு. கு. சின்னப்பா, விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் திரு. ம. சிந்தனை செல்வன், திரு. எஸ்.எஸ். பாலாஜி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி சார்பில் திரு. வீ.பி. நாகைமாலி, திரு. மா. சின்னதுரை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு. டி. ராமச்சந்திரன், திரு. க. மாரிமுத்து, மனிதநேய மக்கள் கட்சி சார்பில் முனைவர் ஜவாஹிருல்லா, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி சார்பில் திரு. ரா. ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் திரு. தி. வேல்முருகன், புரட்சி பாரதம் கட்சி சார்பில் திரு. பூவை ஜெகன் மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு வருகை புரிந்தவர்களை தலைமைச் செயலாளர் திரு. வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார்.

பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இக்கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்து, அரசு மேற்கொண்டு வரும் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கு, அவர்களது முழு ஒத்துழைப்பையும் வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

பின்னர், கூட்டத்தில் கலந்து கொண்ட சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கொரோனா பரவலைத் தடுக்கும் வகையில் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்குவதாகத் தெரிவித்து, அரசுக்கு ஆலோசனைகளை வழங்கினார்கள்.

பின்னர், இந்த ஆலோசனைக் கூட்டத்தின் இறுதியில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**<u>தீர்மானம் – 1</u>**

கொரோனா நோய்த் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த தமிழக அரசு மேற்கொள்ளும் உரிய நடவடிக்கைகளுக்கு அனைத்துக் கட்சிகளும் முழு ஒத்துழைப்பு நல்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

**<u>தீர்மானம் – 2</u>**

நோய்த் தொற்று வேகமாகப் பரவி வரும் இக்காலக் கட்டத்தில், அனைத்துக் கட்சியினரும் பொதுக் கூட்டங்கள் மற்றும் ஏனைய அரசியல் கட்சி நிகழ்வுகள் போன்றவற்றை முற்றிலுமாக நிறுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

**<u>தீர்மானம் – 3</u>**

நோய்த் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்பதால், கள அளவில் அனைத்துக் கட்சியினரும் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை முறையாகக் கடைபிடித்திடுமாறு மக்களை அறிவுறுத்தி, வழிகாட்டிகளாக நடப்பது என்றும், மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளில் அனைவரும் முழு மனதோடு ஈடுபடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

**<u>தீர்மானம் – 4</u>**

நோய்த் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்த ஆலோசனைகளை வழங்க, சட்டமன்றக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆலோசனைக் குழு அமைக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

**<u>தீர்மானம் – 5</u>**

அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், ஒருமனதாக அனைத்துக் கட்சித் தலைவர்களும் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில், மக்களின் உயிர் காக்கும் பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஊரடங்கு விதிமுறைகளை மேலும் தீவிரப்படுத்த வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

பின்னர், தலைமைச் செயலாளர் அவர்கள் நிறைவுரை ஆற்றினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தின் இறுதியில், மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் நன்றியுரை நல்கினார்.

இக்கூட்டத்தில் அரசு தலைமைச் செயலாளர் முனைவர். வெ. இறையன்பு, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. ஜ.கு. திரிபாதி, இ.கா.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.

அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வுத் துறையின் அரசு முதன்மை செயலாளர் டாக்டர். ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வுத் துறையின் முதன்மைச் செயலாளர் / சிறப்புப்பணி அலுவலர் முனைவர். ப. செந்தில்குமார், இ.ஆ.ப., சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப., காவல் நுண்ணறிவு பிரிவின் கூடுதல் தலைமை காவல் இயக்குநர் திரு. சௌ. டேவிட்சன் தேவாசிர்வாதம், இ.கா.ப., பொதுத்துறையின் அரசு செயலாளர் முனைவர். டி. ஜகந்நாதன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**